24.02.16

இன்றைய வேளாண் செய்திகள்

## நெல்லி சாகுபடியில் லாபம் அள்ளும் விவசாயி



திண்டுக்கல் - தாடிக்கொம்பு ரோட்டில் உள்ளது பூதிப்புரம். இங்குள்ள விவசாயி ராஜூவின் நெல்லித்தோட்டம் 2.5 ஏக்கரில் உள்ளது. இதில் ஒரு ஏக்கரில் 265 பெருநெல்லி மரங்களும், மூன்று சிவப்பு நெல்லி மரங்களும் நட்டுள்ளார். சிவப்பு நெல்லி (பி.எஸ்.ஆர்.1) மரங்களிலுள்ள பூக்களில் ஆண் மகரந்த தூள்கள் உள்ளன. அவை பெருநெல்லி மரங்களின் மகரந்த தூளுடன் சேர்ந்து மகசூலை அதிகரிக்கின்றன. இதனை முறையாக பயன்படுத்தி ஆட்டுச் சாணம், மக்கிய தொழு உரம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி நெல்லி சாகுபடியில் ஏக்கருக்கு ஆண்டுக்கு ரூ.ஒரு லட்சம் லாபம் பெற்று அசத்துகிறார் விவசாயி ராஜூ! அவர் கூறியதாவது: நிலத்திற்கு ஏற்றாற்போல் நன்கு இடைவெளி விட்டு மரங்களை நட்டு, வளர்த்தோம். வளரும் பருவத்தில் ஒவ்வொரு ஐந்து மணி நேரத்திற்கு தண்ணீர் விட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் நீர் பாய்ச்ச

சொட்டு நீர்ப்பாசனத்தை ரூ.58 ஆயிரம் செலவில் அமைத்தோம். இதற்கு தோட்டக்கலைத்துறை மூலம் மானியமாக ரூ.12 ஆயிரத்து 500 கிடைத்தது. பின் ஒன்றரை ஆண்டில் செழித்து வளர்ந்த மரங்கள் அடுத்த இரண்டரை ஆண்டில் பூத்து, காய்த்துக் குலுங்கின. நான்கரை ஆண்டுகளில் விளைச்சல் அதிகரித்தது. இடையில் அடிஉரம், தொழு உரம், ஆட்டுக் கழிவுகளின் இயற்கை உரங்களை இட்டதால் பூக்கள் விரைவாக பூக்கத் துவங்கின.

அதிக எடையுடன் நெல்லி மொத்தம் 265 பெருநெல்லி மரங்களில் மரத்திற்கு 100 கிலோ முதல் 150 கிலோ வரை விளைச்சல் இருந்தது. நன்கு விளைந்த ஒரு நெல்லிக்காயின் எடை 105 முதல் 110 கிராம் வரை இருந்தது. இதுதவிர இயற்கை முறையில் விளைந்த நெல்லி என்பதால் விற்பனை செய்வதும் சுலபமாக இருந்தது. முதல் 4 ஆண்டுகளில் உள்ள விளைச்சலை விட தற்போது விளைச்சல் அதிகரித்துள்ளது. ஏக்கருக்கு 10 டன் அளவில் விளைச்சல் கிடைக்கிறது. அவ்வப்போது கவாத்து எடுப்பதும் விளைச்சல் அதிகரிப்பதற்கு உதவியாக இருக்கிறது. நெல்லிக் காய்களின் அளவை பொறுத்து விலை கிலோ ரூ.10 முதல் ரூ.30 வரை விற்பனையாகிறது. ஏக்கருக்கு செலவு போக ஒரு லட்சம் கிடைக்கிறது, என்றார்.

அதிக மகசூலுக்காக தோட்டக்கலைத்துறையின் மூலம் ஊக்கத்தொகையாக ரூ.5 ஆயிரமும் பெற்றுள்ளார் விவசாயி ராஜு. இவரை 99766 - 21067ல் தொடர்பு கொள்ளலாம்.

**-வீ.ஜெ.சுரேஷ், திண்டுக்கல்.**

## பயிர்களை பாதுகாக்க பறவை படுக்கைகள்!

செயற்கையாக தயாராகும் பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்தாமல் அந்த நிலத்தில் கிடைக் கும் பொருட்களை பயன்படுத்தி பயிரை காப்பது தான் சிறந்தவழி. வேலிப்பகுதியில் உள்ள மரக்கிளைகளில் பறவைகள் உட்கார வசதி செய்ய வேண்டும். மரங்கள் இல்லாவிட்டால் தரையிலிருந்து 5 - 6 அடி உயர குச்சிகளை "டி' வடிவில், கவட்டை வடிவில் கட்டினால் பறவைகள் உட்கார முடியும். இதன் மூலம் வயலில் உள்ள தாய்ப்பூச்சி, புழு மற்றும்

கூட்டுப்புழுக்களை பறவைகள் பிடித்து உண்ணும். இரவில் உலா வரும் ஆந்தை, கூகை, கோட்டான்களும் அமர்ந்து எலிகளை பிடித்து உண்ணும். இதற்கு ரசாயன மருந்தோ, வேறு செலவுகளோ தேவையில்லை. ஏக்கருக்கு 20 இடங்களில் இதுபோன்ற பறவை இருக்கைகளை நிரந்தரமாக கட்டி வைத்தால் அறுவடை காலத்தில் சேதத்தை தவிர்க்கலாம். காலி டப்பாக்கள், பெரிய டின், பயன்படாத சைக்கிள் டயர், கார் டயர், கம்பு, மருந்து டப்பாக்களிலும் ஆங்காங்கே கட்டி தொங்கவிட்டால் பறவைகள் அவற்றை கூடுபோன்று பயன்படுத்தும்.

**-முனைவர் பா.இளங்கோவன், தோட்டக்கலை உதவி இயக்குனர், ஒழுங்குமுறை மார்க்கெட் கமிட்டி வளாகம், உடுமலைபேட்டை.**

## குழித்தட்டே லாபம் தரும்

உற்பத்தி செய்யும் நாற்றுக்கள் தரமாக, வீரியமுடன், பூச்சி, நோய் தாக்குதலின்றி இருக்க வேண்டும். அகலப்பாத்தி அல்லது மேட்டுபாத்தி மூலமோ, வயலில் நேரடி உற்பத்தி செய்யும் போது நாற்றுக்கள் மெலிந்து வீரியம் குறைந்து காணப்படும். பராமரிப்பு செலவு அதிகமாகிறது; உற்பத்தி குறைகிறது.

குழித்தட்டுகள் சந்தையில் எளிதாக கிடைக்கின்றன. காய்கறி பயிர்களுக்கு 0.8 மி.மீ., தடிமன் கொண்ட 98 குழிகள் உள்ள குழித்தட்டுகளை பயன்படுத்தலாம். அதிகப்படியான நீர் வழிவதற்கு ஏதுவாக அடியில் துவாரங்கள் இருக்கும். பதப்படுத்தப்பட்ட தென்னை நார்க்கழிவுகளை வளர் ஊடகமாக பயன்படுத்தலாம்.

காய்கறி பயிர், பூக்கள் மற்றும் நாற்று மூலம் பயிர் செய்யும் அனைத்து பயிர்களையும் உற்பத்தி செய்யலாம். காய்கறி விதைகளை சூடோமோனாஸ் பூஞ்சாணகொல்லியால் விதை நேர்த்தி செய்து குழிக்கு ஒரு விதை இட்டு நார்க்கழிவால் மூடவேண்டும். தட்டுக்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைத்து வெளிச்சம் புகாதவாறு பாலிதீன் தாள் கொண்டு 5 நாட்கள் மூடிவைக்க வேண்டும். அதன்பின் விதை முளைவிட ஆரம்பிக்கும். இவற்றை நிழல்வலை நாற்றங்காலில் அடுக்கி வைக்க வேண்டும். இம்முறையில் பராமரிப்பு செலவு

குறைவு.

சமவெளிப் பகுதியில் 50 சதவீத நிழல் தரும் பச்சைநிற நிழல்வலையும், மலைப்பகுதியில் 30 சதவீதம் நிழல் தரும் கருப்புநிற வலையும் பயன்படுத்தலாம். வைரஸ் நோய் பரப்பும் பூச்சிகள், நேரடியாக நாற்றுக்களை தாக்கும் பூச்சிகளை பாதுகாக்க நான்கு பக்கமும் நைலான் வலை அமைக்க வேண்டும்.

**-பே.இந்திராகாந்தி,**

**வேளாண் துணை இயக்குனர்,**

**நீர் மேலாண்மை பயிற்சி நிலையம்,**

**விநாயகபுரம், மதுரை**

**விளையாட்டு செய்திகள்:கோவை**

வேளாண் பல்கலை தடகள போட்டி தமிழ்நாடு அணிக்கு 4 பதக்கங்கள்

கோவை:அகில இந்திய வேளாண் பல்கலை தடகள போட்டியில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கு துவக்க நாளிலேயே 4 பதக்கங்களை பெற்றனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில் 16வது அகில இந்திய அளவில் அனைத்து வேளாண் பல்கலை மாணவ, மாணவியருக்கான தடகள போட்டிகள் மற்றும் விளையாட்டு போட்டி கள் வேளாண் பல்கலை மைதானத்தில் நடந்து வருகிறது.

தடகள போட்டி :ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பெற்றவர்கள்:

ஈட்டி எறிதல்: தமிழ்நாடு வேளாண்பல்கலை ராஜேஷ்குமார்; மீரட் பல்கலை முகேஷ்; பாகால்கோட் பல்கலை யாதவ். 1,500மீ., பர்பானி பல்கலை யாதவ்; பிடார் பல்கலை விஸ்வநாத்; தார்வார் பல்கலை பிரசாத்தோணி.* பெண்கள் குண்டுஎறிதல்: தமிழ்நாடு வேளாண் பல்கலை ப்ரீத்தி; பெங்களூரு பல்கலை அமுல்யா; தமிழ்நாடு வேளாண் பல்கலை சங்கீதா பிரியா. 1,500மீ.,: லூதியானா பல்கலை கவுர்; தமிழ்நாடு வேளாண் பல்கலை செல்வ லட்சுமி; ஹிசார் பல்கலை பிரியங்கா. விளையாட்டு போட்டிகள்

*ஆண்கள் கூடைப்பந்து: தார்வாட் பல்கலை 46-12 புள்ளி கணக்கில் ஆந்திரா பல்கலையையும்; நவசாரி பல்கலை 27-2 புள்ளி கணக்கில் பிகானீர் பல்கலையையும்; ஹரியானா பல்கலை 39-22 புள்ளி கணக்கில் தெலுங்கானா பல்கலையையும் வென்றன. வாலிபால்: ரெய்ச்சூர் பல்கலை 3-0 செட் கணக்கில் சோலன் பல்கலையையும்; தெலுங்கானா பல்கலை 2-0 செட் கணக்கில் அரியானா பல்கலையையும் வென்றன. கபடி: நவசாரி 33-26 புள்ளி கணக்கில் ராஜஸ்தானையும்; மகாராஷ்டிரா 33-14 புள்ளி கணக்கில் கர்நாடகாவையும்; குஜராத் 26-10 புள்ளி கணக்கில் ஆந்திராவையும் வென்றன.

தமிழ்நாடு வேளாண் பல்கலை 39-9 புள்ளி கணக்கில் புதுடில்லியையும்; கர்நாடகா 40-16 புள்ளி கணக்கில் சதீஷ்கரையும்; தமிழ்நாடு வேளாண் பல்கலை 25-5 புள்ளி கணக்கில் கான்பூரையும் வென்றன.

தென்னிந்திய கால்பந்து போட்டி இன்று துவக்கம்

கோவை :தென்னிந்திய அளவில் மாணவர்களுக்கான கால்பந்து போட்டி இன்று நாராயணகுரு கலை அறிவியல் கல்லூரியில் துவங்குகிறது.

கோவை க.க.சாவடி நாராயணகுரு கலை அறிவியல் கல்லூரி சார்பில் 12வது தென்னிந்திய அளவிலான கால்பந்து போட்டி, இன்று முதல் 27ம் தேதி வரை கல்லூரி மைதானத்தில் 4 நாட்கள் நடக்கின்றன.கேரளா மாநில இரிஞ்ஞாலகுடா, சோரனுார், கோழிக்கோடு, பாலக்காடு, குருவாயூர், பழநி, கோவை ஆகிய இடங்களை சேர்ந்த 15 கல்லுாரி அணிகள் 'நாக்அவுட்' போட்டியில் பங்கேற்கின்றன. நாராயணகுரு கல்வி அறக்கட்டளை சேர்மன் சுனில் ஹரிதாஸ் போட்டியை துவக்கி வைக்கிறார். போட்டிக்கான ஏற்பாடுகளை உடற்கல்வி இயக்குனர் ஜெயப்பிரகாஷ் செய்து வருகிறார்.

மாவட்ட கல்லுாரி கிரிக்கெட் கோவை:மாவட்ட அளவில் அனைத்து இன்ஜி., கல்லுாரிகளுக்கான கிரிக்கெட் போட்டியில் கிருஷ்ணா இன்ஜி., தொழில்நுட்ப

கல்லூரி வெற்றி பெற்றது. குனியமுத்தூர் கிருஷ்ணா இன்ஜி., தொழில்நுட்ப கல்லூரி சார்பில் கிரிக்கெட் போட்டி கல்லூரியில் நடந்து வருகிறது.அரைஇறுதியில், கிருஷ்ணா இன்ஜி., தொழில்நுட்ப கல்லூரி 21 ரன்கள் வித்தியாசத்தில் எஸ்.வி.எஸ்., இன்ஜி., கல்லூரியை வென்றது.

முதலில் பேட்செய்த கிருஷ்ணா இன்ஜி., தொழில்நுட்ப கல்லூரி 20 ஓவரில் 8 விக்கெட் வித்தியாசத்தில் 106 ரன்கள் எடுத்தது. அடுத்து பேட்செய்த எஸ்.வி.எஸ்., இன்ஜி., கல்லூரி 16 ஓவரில் அனைத்து விக்கெட் இழப்புக்கு 85 ரன்கள் மட்டும் எடுத்து தோல்வியை சந்தித்தது.

மற்றொரு போட்டியில், பண்ணாரி அம்மன் கல்லூரி 23 ரன்கள் வித்தியாசத்தில் கிருஷ்ணா தொழில்நுட்ப கல்லூரியை வென்றது. முதலில் பேட்செய்த பண்ணாரி அம்மன் கல்லூரி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 150 ரன்கள் எடுத்தது. அடுத்து பேட்செய்த கிருஷ்ணா தொழில்நுட்ப கல்லூரி 18.4 ஓவரில் அனைத்து விக்கெட் இழப்புக்கு 127 ரன்கள் எடுத்து தோல்வியை சந்தித்தது.

பள்ளி விளையாட்டு விழா

கோவை: பீளமேடு, நேஷனல் மாடல் மேல்நிலைப்பள்ளியில் விளையாட்டு விழா மற்றும் விருதுகள் வழங்கும் விழா நடந்தது.சர்வதேச தடகள வீரரான கிரிஷ் பீத்தோவன் தலைமை வகித்தார். பள்ளியின் ஸ்கீயர்ஸ், மரைனர்ஸ், ஸ்ப்ரிடன்ர்ஸ், பிளையர்ஸ் என்ற அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டிகளில் மரைனர்ஸ் அணி மூன்றாவது ஆண்டாக பள்ளி சுழற்கோப்பையைத் தட்டிச் சென்றது. மேலும், யோகா, கராத்தே உட்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் விளையாட்டுக்கான கோப்பையை ஸ்கீயர்ஸ் அணியினர் வென்றனர்.

மாவட்ட கூடைப்பந்து

கோவை : மாவட்ட பாரத் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் மாவட்ட அளவிலான கூடைப்பந்து போ ட்டி ஆண்கள் பிரிவில் யுனைடெட் ஸ்போர்ட்ஸ் கிளப்பும், பெண்கள் பிரிவில் பி.எஸ்.ஜி. ஸ்போர்ட்ஸ் கிளப்பும் சாம்பியன் பட்டம் வென்றன.

* ஆண்கள் பிரிவு: அரைஇறுதியில், விங்ஸ் கிளப் 58-46 புள்ளிக் கணக்கில் ரெனவேட்டர்ஸ் கிளப்பையும்; யுனைடெட் கிளப் 89-71 புள்ளிக் கணக்கில் ராஜலட்சுமி மில்ஸ் கிளப்பையும் வென்றன. 3வது இட போட்டியில், ராஜலட்சுமி மில்ஸ் கிளப் 86-67 புள்ளி கணக்கில் ரெனவேட்டர்ஸ் கிளப்பை வென்றது.இறுதி போட்டியில் யுனைடெட் ஸ்போர்ட்ஸ் கிளப் 69-64 புள்ளி கணக்கில் விங்ஸ் கிளப்பை வென்றது. * பெண்கள் பிரிவு: இறுதி போட்டியில் பி.எஸ்.ஜி., ஸ்போர்ட்ஸ் கிளப் 67-51 புள்ளி கணக்கில்

ஆர்.கே.எஸ்., கிளப்பை வென்றது.

ரத்தினபுரி பள்ளி சாம்பியன்

கோவை :மாவட்ட அளவில் அனைத்து மாநகராட்சி பள்ளிகளுக்கான தடகள மாணவ, மாணவியர் பிரிவில் ரத்தினபுரி மாநகராட்சி பள்ளி சாம்பியன் பட்டம் வென்றது.மாநகராட்சி பள்ளி கல்வித்துறை சார்பில் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை அனைத்து மாநகராட்சி பள்ளிகளுக்கான தடகள போட்டி நேரு ஸ்டேடியத்தில் நடந்தது. 45 பள்ளிகளை சேர்ந்த 702 மாணவ, மாணவியர் 14, 17, 19 வயது அடிப்படையில் 100மீ., 200மீ., 800மீ., 1,500மீ., நீளம்தாண்டுதல், குண்டு எறிதல், பிரிவுகளில் பங்கேற்றனர்.

14 வயது - ரத்தினபுரி பள்ளி கார்த்திக் 15 புள்ளிகளுடனும்; 17 வயது- ரத்தினபுரி பள்ளி சரவணன் 10 புள்ளி களுடனும்; 19 வயது - சித்தாபுதுார் பள்ளி விவேகானந்தன் 15 புள்ளிகளுடனும் சாம்பியன் பட்டம் வென்றனர்.

14 வயது - சங்கனூர் மாநகராட்சி நடுநிலை பள்ளி ரீஜா 10 புள்ளிகள்; 17 வயது- ரத்தினபுரி பள்ளி நந்தினி 15 புள்ளிகள்; 19 வயது-ராமகிருஷ்ணாபுரம் பள்ளி சவுந்தர்யா, ஆர்.எஸ்.புரம் அம்மனிஅம்மாள் பள்ளி ஷாலினி தலா 8 புள்ளிகளுடன் தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றனர். மேயர் ராஜ்குமார் பரிசளித்தார்.

**கறவை மாடு வாங்க மானிய உதவி: 'டாப்செட்கோ' அழைப்பு**

கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ளோரை ஊக்குவிக்கும் விதமாக, இரு கறவை மாடுகள் வாங்க, 'டாப்செட்கோ' சார்பில், கூட்டுறவு வங்கிகளில், மானிய கடன்

உதவிகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாப்செட்கோ) சார்பில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பல்வேறு திட்டங்களில், கடனுதவிகள் வழங்கப்படுகின்றன. இதில் கடன் பெற, கிராமப்புறத்தில் வசிப்போராக இருப்பின், 81 ஆயிரத்துக்குள்ளும், நகர்புறமாக இருப்பின், 1.03 லட்சத்திற்கு மிகாமலும், ஆண்டு வருமானம் இருப்பது கட்டாயம். குடும்பத்தில், 18 - 60 வயதுக்குட்பட்ட ஒருவருக்கு மட்டுமே, கடன் பெறும் தகுதி இருப்பதால், ஜாதி சான்று, குடும்ப அட்டை, இருப்பிட சான்று உடன் கொண்டு வருதல் அவசியம். இதில், இரு கறவை மாடு வாங்க, 60 ஆயிரம் ரூபாய் வரை, மானியக்கடன் உதவிகள் அளிக்கப்படுகின்றன. இக்கடன்களை, அருகிலுள்ள, கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட மற்றும் அட்டவணையிடப்பட்ட தனியார் வங்கிகளிலும் பெறலாம்.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ராமசாமி கூறுகையில், "கறவை மாடு வளர்ப்பில் ஆர்வமுள்ளோருக்கு, 60 ஆயிரம் கடன் தொகை, ஆறு சதவீதவட்டியில் அளிக்கப்படுகிறது.

"இத்திட்டத்தில் பங்கேற்க தகுதியுள்ளோர், கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள, பிற்படுத்தப்பட்டோர் அலுவலகத்தில், விண்ணப்பத்தை பெறலாம்.

சான்றிதழ்கள் சரியாக இருக்கும் பட்சத்தில், ஆய்வுக்கு உட்படுத்தி கடன் வழங்கப்படும். கூடுதல் தகவலுக்கு, 0422- 2300 403 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

## முயல் வளர்ப்புக்கு நாளை பயிற்சி

ஏனாத்துார், உழவர் பயிற்சி மையத்தில், முயல் வளர்ப்பு குறித்து, ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதுதொடர்பாக, உழவர் பயிற்சி மையத்தின் தலைவர் வீரமணி வெளியிட்ட செய்திக்குறிப்பு:காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்துாரில், தமிழக கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், உழவர் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு குறித்த தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த வகையில், நாளை, முயல் வளர்ப்பு குறித்து, ஒரு நாள் பயிற்சி வழங்கப்படவுள்ளது. கால்நடை பண்ணை தொழில்களில், முயல் வளர்ப்பு லாபகரமான தொழிலாக உள்ளது. பயிற்சியில் பங்குபெற ஆர்வமுள்ளவர்கள், இன்று முதல், 044-27264019 என்ற தொலைபேசியில் பெயர்களை பதிவு செய்யலாம்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 26ம் தேதி, காலை 11:00 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை, மற்றும் இதர வேளாண் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்படி

கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாறு, ஆட்சியர் சுந்தரவல்லி கேட்டுக் கொண்டுள்ளார்.

## மாந்தோப்பில் ஊடுபயிராக கேழ்வரகு சாகுபடி

மாந்தோப்பில்,மாஞ்செடிகளுக்கு ஊடாக, கேழ்வரகு பயிரிடப்பட்டு வருகிறது. இதனால், விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும்.

ஆர்.கே.பேட்டை ஒன்றியம், விடியங்காடு மற்றும் தேவலாம்பாபுரம் சுற்றுப்பகுதியில், மலைகள் அதிகம் உள்ளன. மலைச்சரிவுகளில் மாந்தோப்புகள் உள்ளன.மாந்தோப்பில், மாஞ்செடிகள் நடப்பட்டதில் இருந்து, ஐந்து ஆண்டுகளில் பயன்தர துவங்கும். 20 அடி சதுர பரப்பிற்கு ஒரு செடி என்ற அளவில் பயிரிடப்படும். மாஞ்செடிகளுக்கு இடையே உள்ள நிலம், ஐந்து ஆண்டுகளுக்கு வீணாக இருப்பதை விவசாயிகள் விரும்புவது இல்லை.தேவலாம்பாபுரம் பகுதி விவசாயிகள், மாஞ்செடிகளுக்கு இடையே உள்ள பகுதியில் கேழ்வரகு பயிரிட்டு வருகின்றனர். இதனால், மாந்தோப்பில், களை கட்டுப்படுத்தப்படுவதுடன், செடிகளுக்கு முறையான பாசன வசதியும் கிடைக்கிறது.மாஞ்செடிகள் பயன்தர துவங்கும் வரை, ஊடுபயிர் சாகுபடியால், விவசாயிகள் கூடுதல் லாபம் பார்த்து வருகின்றனர்.

## தொடர் மின்வெட்டால் காய்ந்து வரும் நெற்பயிர்கள்

பாப்பிரெட்டிப்பட்டி: பாப்பிரெட்டிப்பட்டி, தென்கரைக்கோட்டை பகுதிகளில், தொடர் மின் வெட்டால் நெற்பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, ஜம்மணஹள்ளி, ஆலமரத்துப்பட்டி கிராமத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் நெல் சாகுபடி செய்துள்ளனர். இந்த நெற் பயிர்களுக்கு, கிணற்றில் தண்ணீர் இருந்தும், தொடர் மின் வெட்டால் தண்ணீர் பாய்ச் சமுடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். கடந்த, 20 நாட்களாக சீரான மின்சாரம் கிடைக்காத நிலை உள்ளது. இது குறித்து அரூர் மின்சார வாரிய அதிகாரிகளிடம் பல முறை முறையிட்டும், எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை.

## விவசாயிகளுக்கு கல்வி சுற்றுலா: ஆத்மா திட்டத்தில் ஏற்பாடு

தஞ்சாவூர் கால்நடை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு விவசாய சுற்றுலா, தான்தோன்றிமலை பகுதி விவசாயிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் வசந்தகுமார் அறிக்கை: கரூர் மாவட்டம், பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், தான்தோன்றிமலை வட்டார வேளாண்மை துறையுடன் இணைந்து, ஆத்மா திட்டத்தில் தான்தோன்றி வட்டாரத்தை சேர்ந்த, 50 விவசாயிகளுக்கு, ஒருங்கிணைந்த கால்நடை உற்பத்தி பற்றிய இரண்டு நாள் இலவச கல்வி சுற்றுலா ஏற்பாடு செய்துள்ளது. இது, வரும், 29, மார்ச், 1ம் தேதி ஆகிய நாட்களில் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில், தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், வல்லம் அருகில் அமைந்துள்ள கால்நடைகளுக்கான மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் மற்றும் இந்திய பயிர் பதப்படுத்துதல் தொழில் நுட்ப மையம் ஆகிய இடங்களுக்கு அழைத்து செல்லப்படுகின்றனர். கல்வி சுற்றுலாவின் போது கால்நடை உற்பத்தி, கால்நடைகளுக்கான மூலிகை மருத்துவ முறைகள், தீவன தயாரிப்பு, பசுந்தீவன உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல், அசோலா வளர்ப்பு, தூய்மையான பால் உற்பத்தி, மண் புழு உரம் தயாரித்தல், சாண எரிவாயு உற்பத்தி, மதிப்புக்கூட்டப்பட்ட கால்நடை சார்ந்த பொருட்கள் உற்பத்தி குறித்த புதிய தொழில் நுட்பங்கள் விளக்கப்படும். ஆத்மா திட்டத்தில், இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாவில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள தான்தோன்றிமலை வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர், முன்பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## 1.89 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட இலக்கு

கரூர் மாவட்டத்தில், கோமாரி நோய் தடுப்பூசித் திட்டம், 10வது சுற்று மூலம், ஒரு லட்சத்து, 89 ஆயிரத்து, 600 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கான இலக்கீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோமாரி நோய் தடுப்பூசித் திட்டம், 10வது சுற்று தொடர்பான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் ராஜேஷ் கூறியதாவது: கால்நடைகளை அதிகளவில் தாக்கக்கூடிய கோமாரி நோயை முற்றிலும் ஒழியும் விதமாக, சிறப்பு முகாம் நடத்தி கால்நடைகளுக்கு தேவையான தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் ஒன்பது சுற்றுகளாக சிறப்பு முகாம் அமைக்கப்பட்டு, கால்நடைகளுக்கு தேவையான தடுப்பூசி போடப்பட்டது. இதன்மூலம், கால் மற்றும் வாய் பகுதியை தாக்கக்கூடிய கோமாரி நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டு வருகிறது. தற்போது, 10வது சுற்று தடுப்பூசி முகாம், மார்ச், 1 முதல், மார்ச், 21 வரை மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில், ஒரு லட்சத்து, 89 ஆயிரத்து, 600 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி போட்டுக் கொள்ளாத கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் காரணமாக கறவை மாடுகளின் பால் அளவு குறைவும், எருதுகள் வேலைத்திறன் குறைவும். இளங்கன்றுகள், இதனால் இறப்பு ஏற்படும் நிலையும் உண்டாகும். எனவே அனைத்து பகுதிகளிலும் கால்நடைகளை வளர்த்துவரும் விவசாயிகள், பசு மற்றும் எருமைகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட்டு கோமாரி நோயை ஒழிக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். கூட்டத்தில், டி.ஆர்.ஓ., அருணா, கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் பழனிவேல், துணை இயக்குனர் கதிர்வேல், உதவி இயக்குனர் முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மறுசாகுபடிக்கு ஒட்டன்சத்திரம் விவசாயிகள்டூ கட்டுப்படியான விலை இல்லாததால்**

ஒட்டன்சத்திரம்:விவசாய விளைபொருட்களுக்கு தொடர்ச்சியாக கட்டுப்படியான விலை கிடைக்காததால், மறுசாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயமே பிரதான தொழில். இங்கு காய்கறி சாகுபடி முதலிடத்தில் உள்ளது. பருவமழை சரியான நேரத்தில் பெய்யும் போது மானாவாரி நிலங்களில் மக்காச்சோளம், பருத்தி, கடலை மற்றும் சோளம் பயிரிடப்படுகிறது. கடந்த நவம்பர், டிசம்பரில் மழையை பயன்படுத்தி சாகுபடி செய்த மக்காச்சோளம், தற்போது அறுவடை செய்யப்படுகிறது. கிணற்றுப் பாசனம் மூலம் நடப்பட்ட தக்காளி, பல்லாரி, சின்ன வெங்காயமும் அறுவடையாகி வருகிறது. மக்காச்சோளத்திற்கு ஓரளவு விலை கிடைத்த போதும், தொடர்ந்து மழை பெய்ததால் கதிர்கள் பெரிதாகாமல் சுருங்கின. இதனால் மகசூல் பாதியாக குறைந்துவிட்டது. தக்காளி, பல்லாரி நன்றாக விளைந்திருந்த போதிலும், மார்க்கெட்டில் இவற்றின் விலை மிகவும் குறைவாக உள்ளது. ஆட்கள் பற்றாக்குறையால் விவசாய கூலி உயர்வு, உரம், பூச்சிமருந்து விலை ஏற்றம் போன்ற காரணங்களால் இந்த விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத நிலை உள்ளது. ஏற்கனவே கறவை மாடுகளை விற்று விவசாயம் செய்தவர்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்துடன் கோடை வெயில் துவங்கிவிட்டதால் கிணறுகள், போர்வெல்களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. அம்பிளிக்கையைச் சேர்ந்த விவசாயி திருமூர்த்தி கூறுகையில், ""காய்கறிகள் விலை வீழ்ச்சி மற்றும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விட்டது போன்றவற்றால் அடுத்த கட்ட சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்குகின்றனர்," என்றார். மக்காச்சோளத்திற்கு ஓரளவு விலை கிடைத்த போதும், தொடர்ந்து மழை பெய்ததால் கதிர்கள் பெரிதாகாமல் சுருங்கியது. இதனால் மகசூல் பாதியாக குறைந்துவிட்டது.

**தர்ப்பூசணி வரத்து அதிகரிப்பு**

மாவட்டத்தில் வெயில் வாட்டத் துவங்கியுள்ள நிலையில் வட மாவட்டங்களிலிருந்து தர்ப்பூசணி வரத்து அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வறண்ட வானிலை நிலவுகிறது. பகலில் வெப்பம் கடுமையாக இருப்பதால் ஆட்கள் நடமாட்டம் குறைந்து விட்டது. ஜூஸ், கரும்புச்சாறு விற்பனை நிலையங்களில் விற்பனை களை கட்டுகிறது. அதிக நீர் சத்துள்ள தர்ப்பூசணி பழங்களும் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளன. ஒரு தட்டு அறுத்த தர்ப்பூசணி ரூ. 10க்கு விற்பனை செய்யப்படுகிறது. பலர் விரும்பி வாங்கி உண்கின்றனர். தர்பூசணி மொத்த வியாபாரிகள் கூறுகையில், ""கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பால் கடலூர் மாவட்டத்தில் தர்ப்பூசணி சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டது. பிற பகுதியிலும் விளைச்சல் கணிசமாக குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள் ளது. விளைகின்ற இடத்தில் ஒரு டன் ரூ. 9 ஆயிரம் விலை போகிறது. லாரி வாடகை 10 டன் பழத்திற்கு ரூ.17 ஆயிரம் ஆவதால் ஒரு கிலோவின் அடக்க விலை ரூ.11 ஆகிறது. சில்லரை வியாபாரிகளுக்கு ரூ.12க்கும், வாடிக்கையாளர்களுக்கு ரூ.15க்கும் விற்பனை செய்கிறோம்," என்றனர்.

**வரத்து குறைவால் எகிறியது விலை**

தேனி மாவட்டத்தில் முருங்கை மரங்கள் நோயால் பாதிக்கப்பட்டு வரத்துக்குறைந்ததால் ஒரு முருங்கைக்காய் ரூ. 10க்கு விற்கப்பட்டது. மாவட்டத்தில் ஆண்டிபட்டி, கடமலைக்குண்டு, கண்டமனூர், ஜெயமங்கலம், கொடுவிலார்பட்டி உள்ளிட்ட சுற்று வட்டாரப்பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டது. வைகை, பெரியாறு ஆற்றுப்பாசனம் மூலம் விளையும் முருங்கை காய்க்கு "ருசி' அதிகமிருப்பதால், உள்ளூர் மட்டுமின்றி மதுரை, தேனி, திண்டுக்கல் போன்ற பகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

நோய் தாக்குதல் காரணமாக முருங்கை மரங்கள் முழுவதும் பட்டுப்போய்,

குச்சிகளாக மாறி வருகின்றன. இதனால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. கடந்த வாரம் தேனி வாரச்சந்தையில் ரூ. 6க்கு விற்ற ஒரு முருங்கை காய், வரத்து குறைவால் ரூ. 10 வரை நேற்று உயர்ந்தது. தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" சீதோஷ்ண நிலை மாற்றத்தால் முருங்கையில் இலைப்புழு தாக்குதல் அதிகம் உள்ளது. இப்புழு தாக்கிய மரங்களின் இலைகள் முழுவதும் உதிர்ந்துவிடும். நாளடைவில் மரங்கள் பட்டுப்போய் குச்சிகளாக காட்சியளிக்கும். இதனால் விளைச்சல் முற்றிலும் பாதிக்கப்படும். இதனை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு "குளோரி பைரி பாஸ்' மருந்தை தண்ணீருடன் கலந்து தெளிக்க அறிவுறுத்தியுள்ளோம். பெரும்பாலான விவசாயிகள் இதை முறையாக கடைபிடிக்காததால் ஆயிரக்கணக்கான மரங்கள் பட்டுப்போயின. வரத்து குறைவால், காய் விலையும் அதிகரித்துள்ளது," என்றார்.

## மிளகாய்க்கு நல்ல நிறம், காரம் கிடைக்கவேளாண் வணிகத்துறை யோசனை

மிளகாய் வத்தலுக்கு நல்ல நிறம், காரம் கிடைக்க வேளாண் வணிகத்துறை யோசனை தெரிவித்துள்ளது.அதன் துணை இயக்குனர் ராமசாமி பாண்டியன் கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் மிளகாய் அறுவடை துவங்கியுள்ளது. மிளகாய் நிறம், காரத்தன்மையை பொறுத்தே விலை கிடைக்கிறது. நல்ல தரமான வத்தலை பெற சில நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

மிளகாயில் பழம் அழுகல் நோய் ஏற்பட்டால் பூஞ்சானக் கொல்லிகள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். காய்கள் ஹீலியத்திஸ், புரோடீனியா புழுக்களால் தாக்கப்பட்டால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கடைப்பிடிக்க வேண்டும்.

பரிந்துரை அளவில் பொட்டாஷ் உரமிட்டால் நல்ல சிவப்பு நிறம், காரத்தன்மை கிடைக்கும். மிளகாய் முழுவதும் சிவப்பு நிறமாக மாறிய பின்பே பறிக்கலாம். பறிக்கும்போது காம்புடன் பறிக்க வேண்டும். பறித்தவுடன் மணல் பரப்பிய களங்களில் பழங்களை பரப்பி காய விட வேண்டும். மிதவெப்ப நிலையில்

காலை, மாலை 4 நாட்கள் காய வைக்க வேண்டும். உலர்த்தியபின் நோய் தாக்கி நிறம்மாறிய வத்தல், உடைந்த வத்தலை நீக்கிவிட வேண்டும்.

ஈரப்பதத்தால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க தரையின் மேல் மணலை பரப்பி, அதன்மேல் சேமிக்க வேண்டும். இரவில் பனியால் பாதிக்கப்படாமல் இருக்க வத்தலை துணியால் மூடி வைக்க வேண்டும். சந்தைக்கு கொண்டு செல்லும்போது வத்தலை சாக்கில் அழுத்தி எடுத்து செல்லக் கூடாது.

விவசாயிகள் ஆர்.எஸ்.மங்கலம், பரமக்குடி, கமுதி, முதுகுளத்தூர் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் உள்ள சோலார் உலர்த்திகளை பயன்படுத்தி கொள்ளலாம்.

மேலும் வத்தல் விலை குறைவாக உள்ள காலங்களில் பரமக்குடி, கமுதி ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட குளிர்பதன சேமிப்பு கிடங்குகளில் சேமித்து வைக்கலாம், என்றார்.

## வெயிலின் தாக்கத்தை தணிக்க வந்துவிட்டது வெள்ளரி பிஞ்சு

ஆர்.எஸ்.மங்கலம்,: ஆர்.எஸ்.மங்கலம். செங்குடி, சீனாங்குடி, பூலாங்குடி, வாணியக்குடி, வரவணி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் வெள்ளரி சாகுபடி செய்துள்ளனர். இவை பெரும்பாலும் மிளகாய், பருத்தி பயிர்களுக்கு இடையே ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோடையை குறிவைத்து சாகுபடி செய்யப்பட்டுள்ள வெள்ளரி செடிகள் பூவும், பிஞ்சுமாக உள்ளது. 15 நாட்கள் கடந்த பிஞ்சுகளை விவசாயிகள் அறுவடை செய்துவருகின்றனர். வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் சந்தை மற்றும் கடைவீதிகளில் வெள்ளரி பிஞ்சு விற்பனை சூடுபிடித்துள்ளது. உள்ளூர் வியாபாரிகள் வயல்வெளிக்கே சென்று வெள்ளரி பிஞ்சுகளை கொள்முதல் செய்கின்றனர். எதிர்பார்த்த விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மலர் கண்காட்சிக்கு செல்லும்மானாமதுரை பூந்தொட்டிகள்**

கொடைக்கானல்,ஊட்டி,ஏற்காடு உள்ளிட்ட மலைப்பிரதேசங்களில் நடைபெறும் மலர்க்கண்காட்சிகளுக்கு பயன்படுத்த மானாமதுரையில் பூந்தொட்டி தயாரிப்பு பணி தீவிரமடைந்துள்ளது. மானாமதுரையில் கலைநயம் மிக்க பொருட்களுடன் வீடுகளில் அழகுக்காக செடிகள் வளர்க்க பயன்படும் பூந்தொட்டி அதிகளவில் தயாரிக்கப்படுகின்றன.சிறிய,பெரிய,நடுத்தரம் என மூன்று வித அளவுகளில் பூந்தொட்டி தயாரிக்கப்படுகின்றன.சாதாரண பூந்தொட்டி ஒரு சில நாட்களிலேயே சேதமடைந்து விடும்.மானாமதுரையில் தயாரிக்கப்படும் பூந்தொட்டி நீண்ட நாட்களுக்கு உறுதியுடன் உழைக்க வல்லது. கொடைக்கானல்,ஊட்டி,ஏற்காடு போன்ற இடங்களில் அரசு சார்பில் நடைபெறும் மலர் கண்காட்சியில் இடம் பெறும் பூந்தொட்டிகள் அனைத்தும் மானாமதுரையில் தயாரானவையாகும்.இதற்கென அரசு அதிகாரிகள் பல்வேறு அளவுகளில் தொட்டிகள் தயாரிக்க ஆர்டர் கொடுத்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரத்தில் இருந்து 5ஆயிரம் பூந்தொட்டி வரை வாங்கி செல்கின்றனர். தற்போது மே மாதம் நடைபெறவுள்ள கொடைக்கானல் மலர்கண்காட்சிக்காக மானாமதுரையில் பூந்தொட்டி தயாரிக்கப்பட்டு வருகிறது.

தயாரிப்பாளர் ரமேஷ் கூறுகையில்: அரசு ஆர்டர் அனைத்தும் கூட்டுறவு சங்கம் மூலமாகவே பெறப்படுகின்றன. கொடைக்கானல் மலர்கண்காட்சிக்கு பூச்செடிகள் வளர்க்க தொட்டி தயாரித்து வருகிறோம்.தற்போது முதல்கட்டமாக ஆயிரத்து 500 தொட்டிகள் கேட்டுள்ளனர். 100 சதவிகித பணி முடிந்து தொட்டிகள் தயாராக உள்ளன, என்றார்.

**மா மரத்தில் பூத்துக் குலுங்குது பூக்கள் மழையை எதிர் நோக்கி விவசாயிகள்**

-விருதுநகர் மாவட்டத்தில் மா மரங்களில் பூக்கள் பூத்து குலுங்குகின்றன. இவை அப்படியே காயாக மாறுவதற்கு மழை தேவை என்பதால் மாசிப்பட்டம் சீசன் மழையை எதிர்பார்த்து மா விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

மாவட்டத்தின் மேற்குப்பகுதியான ராஜபாளையம் சஞ்சீவிமலை, சேத்தூர், தேவதானம், ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகத்தோப்பு, வத்திராயிருப்பு, கூமாப்பட்டி, நெடுங்குளம், சதுரகிரி தாணிப்பாறை உட்பட மேற்குத்தொடர்ச்சி

மலையின் அடிவாரப்பகுதிகளில் மாங்காய் விவசாயம் பெருமளவு நடந்து வருகிறது. இங்கு மகசூலாகும் மாங்காய்கள் மதுரை, கேரளா, தூத்துக்குடி, புதுச்சேரி உட்பட பல்வேறு பகுதிகளுக்கு செல்கின்றன.டு நல்ல மழை பெய்துள்ளதால் அனைத்து பகுதி மா மரங்களிலும் பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. இந்த நேரத்தில் வழக்கமாக "மாசிப்பட்டம்' எனப்படும் மாசிமாத மழை பெய்ய வேண்டும். அவ்வாறு பெய்தால்தான் இந்த பூக்களில் ஈரம்பட்டு அனைத்தும் வடுக்களாக (காய்களாக) மாறும். இல்லாவிட்டால் வெப்பத்தால் பூக்கள் அனைத்தும் கருகி உதிர்ந்துவிடும்.

மழை, வெயில் மரங்களுக்கு எவ்வளவுதான் தண்ணீர் பாய்ச்சினாலும் மழை பெய்தால்தான் பூக்கள் உருவாகின்றன. அதேபோல பூத்த பூக்களும் மழைபெய்தால்தான் காய்களாகின்றன. இந்த இரண்டிற்கும் நடுவே சிலநாட்கள் வெயிலும் வேண்டும். அந்தந்த நேரத்தில் மழை , வெயில் சரியாக இருந்தால்தான் மகசூலை முழுமையாக தரும். எதிர்பார்ப்புஇல்லாவிட்டால் ஒரு மரத்திற்கு 20 காய்களுக்கு மேல் எதிர்பார்க்க முடியாது. இப்படி பல்வேறு பிரச்னைகள் உள்ளதால் விவசாயிகள் ஒவ்வொரு சீசனையும் கடந்து தப்புவது கஷ்டமான ஒன்றாகவே உள்ளது. இந்த ஆண்டு அதிகமான பூக்கள் பூத்திருப்பதால் விவசாயிகளிடம் பெரிய எதிர்பார்ப்பு உள்ளது. மழையை எதிர்பார்த்துஇவை அனைத்தும் காய்களாக மாற இன்னும் ஒருவாரத்திற்குள் லேசான மழைபெய்தால் நல்லது. அவ்வாறு பெய்யாவிட்டால் வழக்கம்போல பூக்கள் பூத்துக் குலுங்கினாலும் அனைத்தும் கருகி உதிர்ந்து விவசாயிகளுக்கு பலன் ஏதும் இல்லாமல் போய்விடும். இதனால் மாவட்ட அனைத்து விவசாயிகளும் மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

விலை இருக்கு விளைச்சல் இல்லை கூமாப்பட்டி விவசாயி திருப்பதி கூறுகையில்,""மா விவசாயிகள் ஒவ்வொரு ஆண்டும் உயிரை கையில் பிடித்துதான் சீசனை கடக்க வேண்டியுள்ளது. நல்ல விளைச்சல் இருந்தால் விலை கிடைப்பதில்லை. விலை இருக்கும் விளைச்சல் இருப்பதில்லை. மகசூல் கிடைக்காவிட்டால் பெரும் இழப்புகளை சந்திக்க நேரிடும்," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**காளான் வளர்ப்பு பயிற்சி: நாளை தொடங்குகிறது**

மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள், பெண்கள், சுயதொழில் முனைவோர் உள்ளிட்டோர் பயன்பெறும் வகையில், வேளாண் பல்கலைக்கழக தகவல் மையத்தில் பிப்ரவரி 25-ஆம் தேதி காளான் வளர்ப்புப் பயிற்சி தொடங்க உள்ளது.

இதில் பங்கேற்க விரும்புவோர் 044-26263484 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என வேளாண் பல்கலை. தெரிவித்துள்ளது.

**பூண்டு சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி முகாம்**

கொடைக்கானலில் பூண்டு சாகுபடி குறித்த தொழில் நுட்ப பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கொடைக்கானல் மற்றும் கோழிக்கோடு பாக்கு மற்றும் வாசனைப் பயிர்கள் இயக்ககம் இணைந்து இம்முகாமை நடத்தின. தோட்டக்கலைத் துறைத் தலைவர் தி.சரஸ்வதி வரவேற்றார். மேலாண்மை குழு உறுப்பினர் அருண் நாகராஜன் தலைமை வகித்தார்.

இதில், பூண்டு சாகுபடியில் தொழில் நுட்பம் குறித்து பேராசிரியர்கள் சரஸ்வதி, தங்கமணி, சீனிவாசன் ஆகியோர் பேசினார். மேலும், இதில், பேராசிரியர்கள் முத்துச்சாமி,யேசுராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வைகை அணை நீர்மட்டம் 45 அடியை தாண்டியது**

வைகை அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 45 அடிக்கு மேல் உயர்ந்தது. வைகை அணையிலிருந்து திண்டுக்கல், மதுரை மாவட்ட பாசனத்திற்கு பெரியாறு பிரதான கால்வாய்மூலம் பிப்.1ஆம் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டது. பின்னர் முறைப்பாசனம் முறையில் தண்ணீர் திறந்து விடப்பட்டுவருகிறது. இதனால் வைகை அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்து பிப்.19ஆம் தேதி 43 அடியாக குறைந்தது.

அதன்பின்னர், பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் வழக்கம் போல் மதுரை மற்றும் ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுகுடிநீர்த் திட்டத்திற்கு 60 கன அடி தண்ணீர் மட்டும் திறந்துவிடப்பட்டுள்ளது. மேலும், வைகை அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து செவ்வாய்க்கிழமை காலை 45.24 அடியாக உயர்ந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை அணைகளின் நீர்மட்டம் : முல்லை பெரியாறு: உயரம்: 117.10 அடி, நீர் வரத்து:278 கனஅடி, நீர்வெளியேற்றம்: 700 கன அடி, கொள்ளளவு: 2,105 மில்லியன் கன அடி. வைகை அணை: உயரம்: 45.24 அடி, நீர்வரத்து: 487 கனஅடி, நீர்வெளியேற்றம்: 60 கன அடி, கொள்ளளவு:1,428 மில்லியன் கன அடி.

**தென்னை விவசாயிகள் கருத்தரங்கம்**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தென்னை மேம்பாட்டு வாரியம் ஆகியன சார்பில் தென்னை சாகுபடி குறித்த கருத்தரங்கம் பொள்ளாச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக்கருத்தரங்கில், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, ஆனைமலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தென்னை விவசாயிகள் பங்கேற்றனர். இதில், தென்னை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் பேசியதாவது: செயற்கைக்கோள் மூலம் தென்னை மரங்கள் குறித்த கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. செயற்கைக் கோள் மூலம் தென்னை மரங்களைக் கணக்கெடுத்து, தொலை உணர்வு (ரிமோட் சென்சிங்) வாயிலாக கண்காணிப்பதன் மூலம், மரங்களுக்கு புதிதாக ஏற்படும் நோய்கள், சத்து குறைபாடு குறித்து எளிதில் கண்டறிய முடியும் என்றனர்.

இதில், தென்னை மரங்களை பாதிக்கும் கேரள வாடல் நோய், இலைக் கருகல் நோய், தஞ்சாவூர் வாடல் நோய் ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இதில் விவசாயிகள் பேசுகையில்,"நோய் பரவாமல் தடுக்க பாதிக்கப்பட்ட மரத்தை வெட்டுவதுதான் தீர்வாக உள்ளது. நோய்த் தொற்றுகளைத் தடுக்க வேளாண் விஞ்ஞானிகள் உரிய தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து தென்னை மரங்களைக் காப்பாற்ற வேண்டும். நோய் தாக்குல் காரணமாக வெட்டப்படும் தென்னை மரங்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 64.80 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 64.80 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 677 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 1,100 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 8.9 டி.எம்.சி.

**நீலகிரி விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி: விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தகவல்**

நீலகிரி விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறையின் ஒத்துழைப்புடன் தேனீ வளர்ப்பு பயிற்சி விரைவில் தொடங்கப்படும் என்று உதகையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ÷நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் உதகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் விவசாயிகளின் 58 கோரிக்கைகள் தொடர்பாக பல்வேறு துறையினருக்கு அனுப்பி பெறப்பட்ட பதில்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது.

அதைத் தொடர்ந்து, பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைந்துள்ள பகுதிகளில் பால் சேகரம் செய்ய வாகனங்கள் இயக்கப்படாத நிலையில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு தலைச்சுமைக் கட்டணமாக லிட்டருக்கு ரூ. 1 வழங்கப்பட்டு வருகிறது. ÷ஆனால், செயல்படாத பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் எல்லைக்குள்பட்ட பகுதிகளில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு தலைச்சுமை கட்டணம் வழங்கப்படமாட்டாது என ஆவின் நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

÷குப்ரிகிரிதாரி வகை உருளைக்கிழங்கு விதை தற்போது நஞ்சநாடு மற்றும் கோல்கிரைன் அரசு தோட்டக் கலைப் பண்ணைகளில் இருப்பில் உள்ளதாகவும், இவ்விதைகள் தேவைப்படும் விவசாயிகள் மேற்படி பண்ணைகளைத் தொடர்பு கொண்டு பயனடையலாமென தோட்டக் கலைத் துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. சேரிங்கிராஸ் பகுதியிலுள்ள உழவர் சந்தையில் பிற்பகல் 2 மணி வரை காய்கறி விற்பனை செய்யப்படுவதால் நீலகிரி கூட்டுறவு சிறப்பங்காடியில் விற்பனை இல்லாமல் கொள்முதல் செய்யப்பட்ட காய்கறிகள் அழுகி நட்டம் ஏற்பட்டதால் காய்கறி விற்பனை நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

÷மேலும், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி உதகையில் தேனீ வளர்ப்பு பயிற்சி தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறையின் மூலம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமென தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், கேத்தி பாலடா, கேத்தொரை, சோகத்துறை சாலை ஒருங்கிணைந்த சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் விரைவில் முடிக்கப்படும் எனவும், தூனேரி சாவடி சாலையிலுள்ள தரைப் பாலத்தை உயர்த்தி சிறு பாலம் கட்ட பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், ஏடிசி முதல் சேரிங்கிராஸ் வரையிலான சாலைப் பணி விரைவில் முடிக்கப்படும் எனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

**சிடிடிஏ ஏல மையத்தில்93 % தேயிலைத் தூள் விற்பனை**

குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 7-ஆவது ஏலம் குறித்த செய்திக்குறிப்பு திங்கள்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இதில் மொத்தம் 10 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 6.67 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.33 லட்சம் கிலோவும் அடங்கும்.

இந்த ஏலத்தில் உள்நாடு, வெளிநாடு வர்த்தகர்கள் பங்களிப்பு அதிகரித்திருந்ததால் 90 சதவீத தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டது. இதனால் அனைத்து ரகத்துக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை ரூ.70 முதல் ரூ. 80, உயர்வகை ரூ.130 முதல் ரூ.200, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.93 முதல் ரூ.97, உயர் ரகம் ரூ.130 முதல் ரூ.200 விலை கிடைத்தது. சிடிசி ரகத்துக்கு அதிகபட்சமாக ரூ.276, ஆர்த்தோடெக்ஸ் ரகத்துக்கு ரூ.256 விலை கிடைத்தது.

அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுகிறது. இதில் மொத்தம் 9.77 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக உள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி**

போளூரை அடுத்த செங்குணம் ஊராட்சியில் வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

போளூர் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின்கீழ், வேளாண்மைத் துறை சார்பில் இந்த முகாம் நடைபெற்றது. முகாமுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தலைமை வகித்தார்.

இதில் திருவண்ணாமலை கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் ராஜ்குமார் கலந்துகொண்டு பேசுகையில், கிராமப்புறங்களில் வெள்ளாடு வளர்ப்பு பயனுள்ளதாக உள்ளது என்றார். மேலும், விவசாயிகள் தகுந்த வெள்ளாடு இனத்தை தேர்வு செய்தல், கொட்டகை அமைத்து பராமரித்தல், தீவன மேலாண்மை, இனப்பெருக்க மேலாண்மை மற்றும் நோய் தடுப்பு முறைகள் உள்ளிட்டவை குறித்து

காணொலிக்காட்சி மூலம் விளக்கினார். ஊராட்சி மன்றத் தலைவர் ராமமூர்த்தி, கவுன்சிலர் முனுசாமி, துணை வேளாண்மை அலுவலர் ஏழுமலை, வேளாண்மை உதவி அலுவலர் அசோக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர் வீரபாண்டியன், உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் வெங்கடேசன், சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

**"கெயில்' திட்டம்விவசாயிகளுக்கு பாதிப்பின்றி செயல்படுத்த வேண்டும்**

"கெயில்' நிறுவனத்தின் இயற்கை எரிவாயு குழாய் பதிக்கும் திட்டத்தை விவசாயிகளுக்குப் பாதிப்பின்றி செயல்படுத்த வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் வே.துரைமாணிக்கம் வலியுறுத்தினார்.

தருமபுரி மாவட்ட அனைத்து விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், தருமபுரி தொலைத் தொடர்பு அலுவலகம் முன், விவசாய விளை நிலங்களில் இயற்கை எரிவாயு குழாய் பதிக்கும் "கெயில்' நிறுவனத் திட்டத்தைக் கண்டித்து செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியது: மத்திய அரசின் "கெயில்' நிறுவனம் சார்பில் கேரள மாநிலம், கொச்சியிலிருந்து தமிழகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 7 மாவட்டங்கள் வழியாக சுமார் 310 கி.மீ. தொலைவுக்கு பெங்களூரு வரை இயற்கை எரிவாயுக் குழாய் பதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதை எதிர்த்து கடந்த 4 ஆண்டுகளாக விவசாயிகள் போராடி வருகின்றனர். இத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், பல ஏக்கர் விளை நிலம், கோயில்கள், பள்ளிக்கூடங்கள், நீர் நிலைகள் அழியும். குழாய்களில் இருந்து எரிவாயு வெளிப்பட்டால், பாதிப்பு கடுமையாக இருக்கும். மேலும், குழாய்கள் பதிக்கின்ற பகுதிகளில் மரக்கன்றுகள் நடக் கூடாது. அந்த இடத்தை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என கடுமையான சட்டங்கள் உள்ளன.

எனவே, விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் இந்தத் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலைகள், அரசு புறம்போக்கு நிலங்கள் வழியாகச் செயல்படுத்தலாம். உச்ச நீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில், நீதிமன்றமும், மத்திய அரசும் விவசாயிகளின் நலன் சார்ந்து இருக்க வேண்டும் என்றார். முன்னதாக, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எம்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் கே.முகமது அலி, அரூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் பி.டில்லிபாபு, மாவட்டச் செயலர் கே.என்.மல்லையன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலர் எஸ்.தேவராஜன், மாவட்டப் பொறுப்பாளர் சின்னசாமி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மண்டலச் செயலர் பொ.மு.நந்தன், கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி ஒன்றியச் செயலர் என்.ராஜா, த.மா.க. விவசாயிகள் பிரிவு மாநிலச் செயலர் செந்தில்குமார் உளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில், விளை நிலங்களில் "கெயில்' எரிவாயுக் குழாய் பதிப்பதைக் கைவிட்டு, மாற்று வழியில் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**தக்காளி விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

தக்காளி கிலோ ரூ.3 ஆக விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். ஊத்தங்கரை மற்றும் அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தக்காளி விவசாயம் செய்து வருகின்றனர்.

ஊத்தங்கரை சுற்று வட்டார கிராமப் பகுதியில் சுமார் 400 ஏக்கரில் தக்காளி விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது தக்காளி ஒரு கிலோ ரூ.3-க்கு விற்பதால் பராமரிப்பு, அறுவடை கூலிக் கூட கிடைக்காமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். கடந்த மாதம் ரூ.30க்கு விற்ற தக்காளி தற்போது ரூ. 3-க்கு விற்பது வேதனையாக உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஊத்தங்கரையில் தக்காளியைப் பதப்படுத்தும் மையம் ஏற்படுத்த வேண்டும், விவசாய விளைபொருள்களுக்கு தகுந்த விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என

விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தக்காளிப் பதப்படுத்தும் மையம் அமைத்தால் தக்காளி விலை வீழ்ச்சியால் இழப்பு ஏற்படுவதைத் தடுக்க முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர். அரசு வழங்கும் உர மானியம் நேரடியாக விவசாயிகளுக்கு சென்று சேர்வதில்லை எனவும், இதில் உள்ள நடைமுறை சிக்கலைத் தீர்க்க அரசும் வேளாண்மைத் துறையினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கூலி ஆள்கள் பற்றாக்குறையைத் தீர்க்க 100 நாள் வேலை உறுதித் திட்டப் பணியாளர்களை விவசாயப் பணிகளுக்கு அனுப்பலாம் என்றும் கூறினர். தற்போது விலை வீழ்ச்சியால் தக்காளியை குப்பைத் தொட்டியில் கொட்டி வருவதாகவும் வேதனையுடன் விவசாயிகள் தெரிவித்தனர்.

**விராலிமலை வட்டாரத்தில் பயிர் மேலாண்மை பயிற்சி**

நிலக்கடலை, எள் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு செவ்வாய்க்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

புதுகை மாவட்டம், விராலிமலை வட்டாரம் சார்பில் அட்மா திட்டத்தில் தேரவூர், தென்னம்பாடி பகுதிகளில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பெ. எட்வர்ட்சிங் தலைமை வகித்தார்.வட்டார தொழில்நுட்ப மேலாளர் த. லட்சுமிபிரபா, இயற்கை விவசாயம், பயிர் எண்ணிக்கை பராமரித்தல், உயிர் உரம்,களை மற்றும் நீர் நிர்வாகம் குறித்தும் அட்மா திட்டச் செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார். உதவி வேளாண் அலுவலர் ஆர். சேகர், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம், நுண்ணுட்டசத்து கலவை தெளிப்பது குறித்து பயிற்சி அளித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பி. சுப்பிரமணி, ந. உமாமகேஸ்வரி ஆகியோர் ஊட்டச்சத்து குறைபாடுகள், மண்புழு உரம், விதைக்கருவி மூலம் நிலக்கடலை விதைப்பு முறை பற்றிய செயல் விளக்கம் அளித்தனர். பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மதுரைக்கு 1,100 டன் நெல் அனுப்பி வைப்பு**

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்திலிருந்து மதுரைக்கு பொதுரக நெல் அரவைக்காக 1,100 டன் சரக்கு ரயிலில் செவ்வாய்க்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

நீடாமங்கலம், மன்னார்குடி பகுதிகளில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் நாள்தோறும் லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு, பின்னர் சரக்கு ரயில் மூலம் வெளி மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை 87 லாரிகளில் 1,100 டன் பொதுரக நெல் மூட்டைகள் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டது.

பின்னர், 70 சுமைதூக்கும் தொழிலாளர்கள் நெல் மூட்டைகளை சரக்கு ரயிலின் 29 பெட்டிகளில் ஏற்றினர். இதைத் தொடர்ந்து, நெல் மூட்டைகள் அரவைக்காக மதுரைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிப். 25 ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் கூறினார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கூட்டத்தில் மாவட்ட விவசாயிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் தவறாமல் பங்கேற்று தங்களது நிறை குறைகளைத் தெரிவித்துப் பயன்பெறலாம்.

**கோவை மாவட்டத்தில் அடுத்த மாதம் கோடை மழை 140 மி.மீட்டர் பெய்ய வாய்ப்பு வேளாண் பல்கலைக்கழகம் தகவல்**

கோவை கோவை மாவட்டத்தில் கோடை மழை 140 மி.மீட்டர் பெய்ய வாய்ப்பு உள்ளதாக கோவை வேளாண் பல்கலைக்கழக காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

<u>பருவ மழைக்காலங்கள்</u>

பொதுவாக ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தென்மேற்கு பருவ மழையும், செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவ மழையும் பெய்வது வழக்கம். இந்த வகையில் கோவை மாவட்டத்தில் கடந்த ஆண்டில் தென்மேற்கு பருவமழை எதிர்பார்க்கப்பட்ட அளவை விட குறைவாக 130 மி.மீட்டர் அளவுதான் பெய்தது. இதனால் சிறுவாணி, பில்லூர் உள்ளிட்ட அணைகள் நிரம்ப வில்லை. இதைத்தொடர்ந்து செப்டம்பர் மாதத்தில் தொடங்க வேண்டிய வடகிழக்கு பருவமழை நவம்பர் மாதம் தொடங்கியது. இந்த மழை ஓரளவு கைகொடுத்தது. இதற்கிடையில் கடந்த ஆண்டு,கோடை காலமான ஏப்ரல் மாதத்தில் வெயில் கொளுத்தியபோதும், கோடையை குளிர்விக்க அவ்வப்போது தொடர்ச் சியாக மழை பெய்தது. இது அதிகபட்சமாக 266 மில்லி மீட்டர் அளவு பதிவானது.

<u>140 மி.மீட்டர் மழை பெய்யும்</u>

இது போல் நடப்பாண்டில் கோடைகாலமான அடுத்த மாதம் (மார்ச்) தொடங்கி மே மாதம் வரை 140 மி.மீட்டர் மழை பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது. இந்த நிலையில் பருவமழை குறைவாக பெய்ததால் தற்போது நாளுக்கு நாள் வெப்பம் அதிகரித்து வருகிறது. கடந்த சில நாட்களாக வெப்பநிலை 97.2 டிகிரி (செல்ஸியஸ்) உள்ளது.

இந்த வெப்பநிலை இனி வரும் நாட்களில் படிப்படியாக அதிகரிக்கும். ஆனால் மே மாதத்தின் 3 –வது வாரத்தில் இருந்து வெப்பநிலை குறையத்தொடங்கி

விடும். கடந்த கோடையை பொறுத்தவரை எதிர்பார்த்ததை விட 100 மடங்கு மழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்து காணப்பட் டது. அதுபோல் மழை அதிகரித்தால் கோடை வெப்பமும் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது என்று கோவை வேளாண் பல்கலைக்கழக காலநிலை ஆராய்ச்சி மையம் தகவல் வெளியிட்டு உள்ளது.

**கடலூரில் காய்கறிகள் விலை சரிவு ஒரு கிலோ தக்காளி ரூ.7–க்கு விற்பனை**

கடலூர்,

கடலூரில் காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. சில்லறை விலையில் ஒரு கிலோ தக்காளி ரூ.7–க்கு விற்பனை செய்யப்பட்டது.

<u>விலை சரிவு</u>

கடலூரில் திருப்பாதிரிப்புலியூர் பான்பரி மார்க்கெட், மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட், முதுநகர் பக்தவச்சலம் மார்க்கெட் என 3 முக்கிய மார்க்கெட்டுகள் உள்ளன. இங்கு பெங்களூரில் இருந்து அதிக அளவில் காய்கறிகள் வரவழைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கடலூர் மட்டுமின்றி சுற்றியுள்ள கிராமங்களில் இருந்தும் பொதுமக்கள், சிறு வியாபாரிகள் இங்கு வந்து காய்கறிகளை வாங்கி செல்கிறார்கள். பருவநிலை மாற்றத்தின் காரணமாக காய்கறிகள் விளைச்சலில் உயர்வு, தாழ்வு காணப்படும். இதனால் அதன் வரத்தை பொறுத்து விலையில் ஏற்றம் தாழ்வுகாணப்படும். தற்போது கடலூரில் காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

<u>காலிபிளவர்</u>

அதாவது சில்லறை விலையில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு கிலோ ரூ.10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி நேற்று கிலோ ரூ.7–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்ட முள்ளங்கி ரூ.8–க்கும், ரூ.40–க்கு விற்பனை செய்யப்பட்ட அவரை ரூ.28–க்கும், ரூ.48–க்கு விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய்(நாணமேடு) ரூ.35–க்கும், ரூ.45–க்கு விற்பனை செய்யப்பட்ட கேரட் ரூ.35–க்கும், ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்ட முட்டைகோஸ் ரூ.14–க்கும், ரூ.25–க்கு விற்பனை செய்யப்பட்ட கொத்தவரங்காய் ரூ.14–க்கும், ரூ.35–க்கு விற்பனை செய்யப்பட்ட மிழகாய்

ரூ.28–க்கும், ரூ.35–க்கு விற்பனை செய்யப்பட்ட காலிபிளவர் ரூ.25–க்கும், ரூ.60–க்கு விற்பனை செய்யப்பட்ட முருங்கைக்காய் ரூ.30–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

வெங்காயம்

வெங்காயத்தின் விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. கிலோ ரூ.14–க்கு விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம்(3–வது தரம்) ரூ.10–க்கும், கிலோ ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்ட 2–வது தரம் ரூ.16–க்கும், கிலோ ரூ.28–க்கு விற்பனை செய்யப்பட்ட முதல்தர வெங்காயம் ரூ.24–க்கும், கிலோ ரூ.30–க்கு விற்பனை செய்யப்பட்ட சாம்பார் வெங்காயம் ரூ.25–க்கும், கிலோ ரூ160–க்கு விற்பனை செய்யப்பட்ட பூண்டு ரூ.120–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தேங்காய் ரூ.10 முதல் 15 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. கிலோ ரூ.18–க்கு விற்பனை செய்யப்பட்ட உருளை கிழங்கு ரூ.4 அதிகரித்து கிலோ ரூ.22–க்கு விற்பனை செய்யப்பட்டது. காய்கறிகளின் விலை சரிவுக்கான காரணம் குறித்து மஞ்சக்குப்பம் அண்ணா காய்கறி மார்க்கெட்டை சேர்ந்த வியாபாரி கூறியதாவது:–

வரத்து அதிகரிப்பு

கடலூர் மார்க்கெட்டுகளுக்கு தற்போது காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளது. உள்ளூர் பகுதிகளில் இருந்தும் சில காய்கறிகள் வருகின்றன. இதனால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த விலை சரிவு இரு வாரங்கள் வரை நீட்டிக்கும். அதன் பின்னர் வெயில் காலம் என்பதால் காய்கறிகளின் விளைச்சல் குறைந்து அதன்காரணமாக விலை உயர வாய்ப்பு உள்ளது. ஆனால் தக்காளி விலையில் மாற்றம் இருக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

## அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.2 கோடிக்கு துவரை விற்பனை

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.2 கோடிக்கு துவரை விற்பனை ஆனது.

விவசாய விளைபொருட்கள்

அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரம்தோறும் திங்கட்கிழமை விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெறும். அதன்படி நேற்று முன்தினம் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு அந்தியூர்,

அத்தாணி, பர்கூர், எண்ணமங்கலம், சென்னம்பட்டி, ஒலகடம், வெள்ளித்திருப்பூர் மற்றும் கர்நாடக மாநிலம் ராமபுரம், மாதேஸ்வரன் மலை உள்பட பல்வேறு பகுதியில் இருந்து 1,000–க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். ஏலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் நடந்தது. 27 ஆயிரம் தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் சிறிய தேங்காய் ஒன்று 2 ரூபாய் 50 காசுக்கும், பெரிய தேங்காய் ஒன்று ரூ.11–க்கும் ஏலம் போனது. தேங்காய் மொத்தம் ரூ.2 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

<u>மக்காச்சோளம்</u>

கொப்பரை தேங்காய் 40 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 409–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 555–க்கும் விற்கப்பட்டது. கொப்பரை தேங்காய் மொத்தம் ரூ.50 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

ஆமணக்கு 16 மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 519–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.5 ஆயிரத்து 69–க்கும் விற்பனை ஆனது. ஆமணக்கு மொத்தம் ரூ.30 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

மக்காச்சோளம் 100 மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.1,229–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,389–க்கும் ஏலம் போனது. மக்காச்சோளம் மொத்தம் ரூ.1 லட்சத்துக்கு 25 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது.

<u>ரூ.2 கோடிக்கு விற்பனை</u>

நரிப்பயறு 100 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தன. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.6 ஆயிரத்து 49–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.7 ஆயிரத்து 115–க்கும் விற்கப்பட்டது. நரிப்பயறு மொத்தம் ரூ.6 லட்சத்துக்கு விற்பனை ஆனது.

நிலக்கடலை 80 மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் நிலக்கடலை (காய்ந்தது) குவிண்டால் ஒன்று

குறைந்தபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 339–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.4 ஆயிரத்து 819–க்கும், நிலக்கடலை (பச்சை) குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.2 ஆயிரத்து 800–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.3 ஆயிரத்து 300–க்கும் விற்பனை ஆனது. நிலக்கடலை மொத்தம் ரூ.75 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. துவரை 3 ஆயிரம் மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.7 ஆயிரத்து 218–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.8 ஆயிரத்து 369–க்கும் ஏலம் போனது. துவரை மொத்தம் ரூ.2 கோடிக்கு விற்பனை ஆனது.

நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் விவசாய விளைபொருட்கள் மொத்தம் ரூ.2 கோடியே 10 லட்சத்து லட்சத்து 80 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. ஈரோடு, கோவை, திருப்பூர், சேலம், தர்மபுரி, மேட்டுப்பாளையம், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் கர்நாடக மாநிலம் மைசூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் விவசாய விளைபொருட்களை ஏலம் எடுத்துச்சென்றனர்.

<u>வாழைப்பழம் ஏலம்</u>

இதேபோல் அந்தியூர் அருகே புதுப்பாளையத்தில் உள்ள பவானி வேளாண்மை கூட்டுறவு மற்றும் உற்பத்தி சங்கத்தின் மூலம் வாழைப்பழத்தார் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு 4 ஆயிரத்து 300 வாழைப்பழத்தார்களை விவசாயிகள் கொண்டுவந்து இருந்தனர். இதில் பூவன் (தார்) ரூ.55 முதல் ரூ.555 வரையும், மொந்தன் வாழை (தார்) ரூ.75 முதல் ரூ.215 வரையும், தேன்வாழை (தார்) ரூ.115 முதல் ரூ.495 வரையும், பச்சைநாடன் (தார்) ரூ.55 முதல் ரூ.185 வரையும், செவ்வாழை (தார்) ரூ.85 முதல் ரூ.560 வரையும், ரொபஸ்டா வாழை (தார்) ரூ.45 முதல் ரூ.215 வரையும், ரஸ்தாளி வாழை (தார்) ரூ.140 முதல் ரூ.415 வரையும் ஏலம் போனது. நேந்திரன் வாழை (கிலோ) 13 ரூபாய் 50 காசு முதல் 27 ரூபாய் 60 காசு வரையும், கதலி ரக வாழை (கிலோ) 15 ரூபாய் 60 காசு முதல் 23 ரூபாய் 10 காசு வரையும் ஏலம் போனது.

மொத்தம் ரூ.4 லட்சத்து 60 ஆயிரத்துக்கு வாழைப்பழம் விற்பனை செய்யப்பட்டது.

**சொட்டு நீர் பாசனத்தை கடைபிடித்தால் 40 சதவீத தண்ணீரை மிச்சப்படுத்தலாம் நீர்நுட்பவியல் மைய இயக்குனர் தகவல்**

ஊட்டி,

சொட்டு நீர் பாசனத்தை விவசாயிகள் கடைபிடித்தால் 40 சதவீத தண்ணீரை மிச்சப்படுத்தலாம் என்று நீர்நுட்பவியல் மைய இயக்குனர் பாண்டியன் கூறினார்.

பயிற்சி முகாம் ஊட்டி தீட்டுக்கல் பகுதியில் மத்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இந்த மையத்தில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு நீர்சேமிப்பு மற்றும் மேலாண்மை குறித்த 5 நாட்கள் பயிற்சி முகாம் நேற்று தொடங்கியது. பயிற்சி முகாமிற்கு மைய தலைவர் கோலா, மூத்த விஞ்ஞானி மணிவண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் வேளாண் பல்கலைக்கழகத்தின் நீர்நுட்பவியல் மைய இயக்குனர் பாண்டியன் கலந்து கொண்டு பேசும்போது கூறியதாவது:–

உலக அளவில் தனிநபர் தண்ணீர் பயன்பாடு என்பது 2 ஆயிரம் கனமீட்டராக உள்ளது. இது இந்திய அளவில் 1700 கன மீட்டராகவும், தமிழக அளவில் வெறும் 700 கன மீட்டராகவும் உள்ளது. இது உலக அளவோடு ஒப்பிடும் போது மிக குறைவாக தனி நபர் தண்ணீர் பயன்படுத்தும் அளவு உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் தமிழகத்தில் நீராதாரம் மிக குறைந்த அளவு உள்ளது. மேலும் நிலத்தடி நீர் குறைவு, மழைக்காலங்களில் வீணாகும் தண்ணீர், பொதுமக்களிடம் தண்ணீர் சேமிப்பு இன்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தனிநபர் பயன்படுத்தும் தண்ணீரின் அளவு குறைவாக உள்ளது.

<u>40 சதவீதம் தண்ணீர் சேமிப்பு சொட்டு நீர் பாசனத்தை விவசாயிகள் கடைபிடித்தால்</u>

40 சதவீத தண்ணீரை மிச்சப்படுத்தலாம். மேலும் நுண்ணீர் பாசனம் உள்ளிட்ட நவீன பாசன முறைகள் குறித்து விவசாயிகளுக்கு நாங்கள் பயிற்சி அளித்து வருகிறோம். தண்ணீர் பற்றாக்குறையில் உலக அளவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

எனவே தமிழகத்தில் பள்ளி பாடத்திலேயே நீராதாரம் மற்றும் நீர் நிலைகளை பாதுகாக்க வேண்டியதின் அவசியம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு கற்று

கொடுக்க வேண்டும். மேலும் மழைநீர் சேமிப்பு அவசியம் குறித்து பொதுமக்களுக்கு விளக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து, மூத்த விஞ்ஞானி மணிவண்ணன் கூறியதாவது:– மானாவாரி வேளாண்மையில் நீர் மற்றும் மண்வள தொழில்நுட்பங்கள், நீர்பிடிப்பு பகுதிகளை பாதுகாத்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் அரசு உருவாக்கி தரும் நலத்திட்டங்களை விவசாய குழு அமைத்து பாதுகாப்பது குறித்தும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியதின் அவசியம், கண்மாய்கள், கால்வாய்கள் ஆகியவற்றை விவசாயிகளே பராமரிப்பது குறித்தும் பயிற்சி அளிக்கிறோம்.

பயிற்சி நிறைவு நாளில் ஈரோடு மாவட்டம் அரியலூர் பகுதியில் அமைக்கப்பட்டு உள்ள மாதிரி நீர் பிடிப்பு மையத்திற்கு அழைத்து சென்று களப்பயிற்சி அளிக்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த பயிற்சி முகாமில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த 28 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தஞ்சையில் இருந்து காஞ்சீபுரத்துக்கு அரவைக்காக 2000 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது**




தஞ்சையில் இருந்து காஞ்சீபுரத்துக்கு அரவைக்காக 2000 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பப்பட்டது. கொள்முதல் நிலையம் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு

குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல்சாகுபடி நடைபெறும். இது தவிர கோடை நெல் சாகுபடியும் நடைபெறுவது வழக்கம். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல், தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் தஞ்சையில் உள்ள நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு சொந்தமான சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படுவதோடு, தமிழகத்தில் திருவள்ளூர், மதுரை, சென்னை, விழுப்புரம், புதுக்கோட்டை உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படும். இந்த நெல் மூட்டைகள் சரக்கு ரெயில்களிலும், லாரிகள் மூலமாகவும் அனுப்பி வைக்கப்படும்.

2000 டன் நெல்

தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா நெல் கொள்முதல் நடைபெற்று வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்டு பிள்ளையார்பட்டியில் உள்ள சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு இருந்த நெல்மூட்டைகள் மற்றும் கொள்முதல் நிலையங்களில் உள்ள நெல்மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு தஞ்சை ரெயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. அங்கிருந்து 2,000 டன் நெல் மூட்டைகள் சரக்கு ரெயிலில் 42 பெட்டிகளில் ஏற்றப்பட்டு காஞ்சீபுரத்துக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டன.

தினகரன்

**தோட்டக்கலை தொழில்நுட்ப பயிற்சி**

தாந்தோணி வட்டார தோட்டக்கலை விவசாயிகளுக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயலபடும் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் மூலம் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி பற்றிய ஒருநாள் உயர் தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. கரூர் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்த பயிற்சியில் வட்டார தோட்டக்கலை அலுவலர் பேபி வரவேற்று பேசினார். கரூர் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் முனியாண்டி தலைமை வகித்து துவக்கினார்.

வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சொர்ணமாணிக்கம் பல்வேறு மானியத்திட்டங்கள் பற்றி பேசினார். புழுதேரி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் திரவியம், காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். நிலைய தோட்டக்கலை தொழில் நுட்ப வல்லுனர் கவியரசு, தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கினார். தொழில்நுட்ப பயிற்சிக்கு பின் உப்பிடமங்கலம் வருவாய் கிராமம் லிங்கத்தூரில் உள்ள முன்னோடி விவசாயி கதிர்வேலு வயல்வெளியில் பந்தல் காய்கறி சாகுபடி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

**காய்கறிகளுக்கு மாறும் திராட்சை விவசாயிகள்**

கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை விவசாயிகள் காய்கறி சாகுபடிக்கு மாறி வருகின்றனர். எனவே, திராட்சை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் அவர்களுக்கு ஆலோசனை கூறி, திராட்சை சாகுபடியை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. கம்பம் பள்ளதாக்கில் சுருளிப்பட்டி,

காமயகவுண்டன்பட்டி, ஆனைமலையன்பட்டி, அணைப்பட்டி, கூடலூர், அனுமந்தன்பட்டி, நாராயணதேவன்பட்டி உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் பன்னீர் திராட்சை விவசாயம் நடக்கிறது. இதன் மூலம் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றன. ஆரம்ப காலங்களில் திராட்சையில் அதிக லாபம் கிடைத்ததால், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் கடன்வாங்கி விவசாய பரப்பை அதிகரித்தனர். காலப்போக்கில் திராட்சையில் நோய் தாக்குதல், போதிய விலை இன்மை போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு உரிய லாபம் கிடைக்கவில்லை. இதனால், விவசாயிகள் வாழை விவசாயத்துக்கு மாறினர். இந்நிலையில், திராட்சை விவசாயத்தை பாதுகாக்க, உத்தமபாளையம் அருகேயுள்ள ஆனைமலையன்பட்டியில் ரூ.3 கோடி செலவில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டது. இங்கு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டதன் நோக்கம், திராட்சை விவசாயத்தை அழிவிலிருந்து பாதுகாத்தல், ஏற்றுமதி தரம் வாய்ந்த திராட்சையை பயிரிடுதல், விவசாயிகளுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துதுல், கம்பம் பள்ளதாக்கில் விளைவிக்கப்படும் திராட்சை பழங்களுக்கு அதிக விலை கிடைக்கும் நிலையை உருவாக்குதல் ஆகியவையாகும். ஆனால், தற்போது இந்த ஆராய்ச்சி நிலையத்தால் திராட்சை விவசாயிகளுக்கு எந்த பயனும் இல்லை. திராட்சை தோட்டங்களில் புடலங்காய், கொடி அவரை, பீர்க்கங்காய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகள் பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் காய்கறிகள் வெளிநாடுகளுக்கு அதிகளவில் அனுப்பப்படுகிறது. உடனடியாக பணம் கிடைப்பதாலும், நஷ்டம் அதிகம் இல்லாமல் இருப்பதாலும் விவசாயிகள் திராட்சை விவசாயத்தில் இருந்து மாறத்தொடங்கி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, திராட்சை ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் விவசாயிகளுக்கு உரிய ஆலோசனை கூறி, திராட்சை பழங்களுக்கு உரிய விலை கிடைக்கவும், பரப்பை அதிகரிக்கவும், திராட்சை விவசாயத்தை காக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு நிலக்கடலை சாகுபடி பயிற்சி**

ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் (அட்மா) நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் வேளாண்மை பற்றிய மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி முத்துசேர்வாமடம்கிராமத்தில் இரண்டாம் கட்டமாக நேற்று நடைபெற்றது. பயிற்சிக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன் தலைமை வகித்தார்.

வட்டார தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி திட்ட செயல்பாடுகளை விளக்கி பயறுவகை சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய முக்கிய தொழில்நுட்பங்களான விதைநேர்த்தி, நிலக்கடலை ரிச்தெளிப்பு மற்றும் ஜிப்சம்இடுதல் குறித்து விளக்கிக் கூறினார்.உதவி தொழில்நுட்ப மேலாளர் முருகன் சாகுபடி குறிப்புகள் நீர்நிர்வாகம், உரநிர்வாகம் குறித்து கூறினார். உதவி வேளாண் அலுவலர் மணிகண்டன் பயிர்பாதுகாப்பு முறைகள் குறித்து விளக்கமளித்தார்.

பயிற்சியில் விவசாயிகளுக்கு உயிர் உரங்களான சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் ரைசோபியம் கொண்டு விதை நேர்த்தி செய்வது செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. விவசாயிகளை அருகில் இருந்த நிலக்கடலை சாகுபடி வயலுக்கு அழைத்து செல்லப்பட்டு பூச்சிகள் மற்றும் நோய்களை கண்டறிந்து அவற்றை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டன. பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மாதிட்ட அலுவலர்கள், உதவிவேளாண் அலுவலர் மணிகண்டன் ஆகியோர் செய்திருந்தனர்.

**குப்பத்தேவன் ஏரியில் தண்ணீர் குறைந்ததால் கடைமடையில் சம்பா பயிர்கள் கருகும் அபாயம்**

சேதுபாவாசத்திரம் கடைமடையான குப்பத்தேவன் ஏரி பாசன சாகுபடி கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தின் கடைக் கோடியான

திருவத்தேவன் ஊராட்சி மற்றும் குப்பத்தேவன் பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் சம்பா சாகுபடி தற்போதுதான் சூழ்விடும் தருவாயில் உள்ளது. பாசனம் தரக்கூடிய குப்பத்தேவன் பெரிய ஏரி நீர்மட்டம் வெகுவாக குறைந்து பாசனம் மதகுகள் நின்றுவிட்டது. இன்னும் ஒரு மாத காலத்திற்கு தண்ணீர் இருந்தால்தான் சாகுபடி முழுமைபெறும். இந்நிலையில் பல்வேறு பகுதிகள் கருகத் தொடங்கி விட்டது. திருவத்தேவன் பெரிய ஏரி பாசன பொறுப்பாளர்கள் மூர்த்தி, செல்வராஜ், சபாபதி, சேதுபாவாசத்திரம் ஒன்றிய விவசாய சங்க பொறுப்பாளர்கள் கந்தசாமி, கருப்பையன், வேலுச்சாமி, நீலகண்டன் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் விவசாயிகளுடன் சென்று பொதுப்பணித்துறை அதிகாரியிடம் முறையிட்டனர். இதனைத் தொடர்ந்து தற்போது மகாமகம் திருவிழாவிற்காக மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரில் இருந்து கல்லணைக்கால்வாய் நாகுடி பிரிவு வாய்க்காலில் 2 தினங்கள் மட்டுமே தண்ணீர் வழங்கப்பட்டது. அது போதுமான அளவு இல்லாததால் கல்லணையில் தேக்கி இருக்கக்கூடிய தண்ணீரை நாகுடி பிரிவு வாய்க்காலில் இன்னும் ஒரு வாரத்திற்கு வழங்கினால்தான் ஏரி நிரம்பி சம்பா சாகுபடியை காப்பாற்ற முடியும். இல்லையேல் விவசாய சங்க பிரதிநிதிகள் சாலை மறியலில் ஈடுபடும் சூழ்நிலை ஏற்படும் என விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது.

**சின்ன வெங்காயம் விலை சரிவு**

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் வரத்து அதிகரிப்பால் சின்ன வெங்காயம் கிலோ ரூ.7க்கு விற்பனை செய்யப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு 3 மாத பயிரான சின்ன வெங்காயம் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. நடப்பாண்டு மழையும் கை கொடுத்ததால், பரவலாக விவசாயிகள் சின்ன வெங்காயத்தை சாகுபடி செய்தனர். முதல் பட்டமாக சாகுபடி செய்யப்பட்ட சின்னவெங்காயம், தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. விளைச்சல் அதிகரித்துள்ளதால் சின்ன வெங்காயத்தின் விலை குறைந்துள்ளது. போச்சம்பள்ளி பகுதியில் கடந்த மாதம் ஒரு கிலோ வெங்காயம் ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனை

செய்யப்பட்டது. தற்போது வரத்து அதிகரித்துள்ளதால் ஒரு கிலோ ரூ.7 ஆக விலை குறைந்துள்ளது. இதனால், வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். விலை வீழ்ச்சியால் அறுவடை கூலி கூட கிடைக்காது என்று விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

**26ம்தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 26ம் தேதி காலை 10.30 மணிக்கு திருச்சி கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடக்கிறது. கலெக்டர் பழனிசாமி தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருட்கள், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்து நேரிலோ, மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம் என கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரத்தசோகையை போக்கும் திராட்சை**




இருமல், சளியை போக்க கூடியதும், காசநோய் வராமல் தடுக்கும் தன்மை கொண்டதும், ரத்தத்தை சுத்தப்படுத்த கூடியதும், மூட்டுவலி, மலச்சிக்கலை சரி செய்யவல்லதும், இதயத்தை பலப்படுத்த கூடியதும், நோய் எதிர்ப்பு சக்தி உடையதுமான சிறந்த பழம் திராட்சை. தற்போது திராட்சை சீசன்

தொடங்கியுள்ளது. இதில் வைட்டமின் சி அதிகம் உள்ளது. திராட்சையை அடிக்கடி சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. நோய்கள் வராமல் தடுக்கிறது. பச்சை, சிவப்பு, கருப்பு நிறத்தில் திராட்சைகள் உள்ளன. அனைத்து வகை திராட்சையிலும் நன்மைகள் உள்ளன. திராட்சையை பயன்படுத்தி இருமல், சளியை போக்கும் தேனீர் தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** உலர்ந்த திராட்சை, வெற்றிலை, லவங்கம், தேன். 15 உலர்ந்த திராட்சையை கழுவி வெந்நீரில் ஊறவைத்து எடுக்கவும். இதில் 2 லவங்கம் தட்டி போட்டவும். இதனுடன் வெற்றிலையை சிறு துண்டுகளாக்கி சேர்க்கவும்.

ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தேன் சேர்த்து குடித்துவர நெஞ்ச கோளாறுகள் சரியாகும். இருமலை கட்டுப்படுத்தும். காசநோய் வரமால் தடுக்கும். பசியை தூண்டும். சளி பிடித்து விடும் என்று திராட்சையை தவிர்த்து விடுகின்றனர். இது தவறு. சளி நுரையீரலை பாதிக்கிறது. அதிகநாள் நுரையீரலில் சளி தங்கியிருந்தால் காசநோய் வரும். திராட்சை சாப்பிட்டால் இது தடுக்கப்படும். பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட திராட்சை ரத்தத்தை சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. திராட்சையை பயன்படுத்தி மூட்டு வலி, மலச்சிக்கலை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

**தேவையான பொருட்கள்:** உலர்ந்த திராட்சை, தனியா, பனங்கற்கண்டு. 15 உலர்ந்த திராட்சையில் ஒரு ஸ்பூன் தனியா சேர்க்கவும். நீர்விட்டு ஊற வைக்கவும். இதை அரைத்து எடுத்து சிறிது நீர்விட்டு கொதிக்க வைக்கவும். சிறிது பனங்கற்கண்டு சேர்த்து வடிகட்டி குடித்தால் மலச்சிக்கல் சரியாகும்.சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலை போக்கும்.

திராட்சையில் உள்ள மருத்துவ வேதிப்பொருட்கள் சிறுநீரை பெருக்க கூடியது. திராட்சையை அடிக்கடி எடுத்துகொள்வதால் சிறுநீர் நன்றாக வெளியேறும்.

மூட்டுகளில் உப்புசத்து சேர்வதால் ஏற்படும் வீக்கம், வலியை போக்கும் மருந்தாகிறது. மூட்டுகளை பலப்படுத்தும். சிறுநீர் பாதையில் ஏற்படும் அழற்சி, சிறுநீரக கற்களை போக்கும் தன்மை கொண்டது.

திராட்சையை பயன்படுத்தி ரத்த சோகையை போக்கும் மருந்து தயாரிக்கலாம். திராட்சை பழத்தை அரைத்து எடுக்கவும். இதனுடன் ஒரு ஸ்பூன் சீரகப்பொடி, நாட்டு சர்க்கரை சேர்த்து கொதிக்க வைக்கவும். வடிகட்டி குடித்துவர இதயம் பலப்படும். ரத்த சோகை சரியாகும். ரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படாமல் பாதுகாக்கும். விதை உள்ள திராட்சையில் அதிக சத்துக்கள் உள்ளன. திராட்சையை விதைகளோடு சாப்பிடுவதால் முழுமையான பலன் கிடைக்கும்.

**உடலுக்கு பலத்தை தரும் தினை**




தினை தமிழகத்தில் தொன்று தொட்டே இருந்து வரும் சிறு தானியமாகும். இதை ஆங்கிலத்தில் பாக்ஸ்டெயில் மில்லட் என்று அழைப்பார்கள். சிடேரியா இட்டாலிகா என்பது இதன் தாவர பெயராகும். தினை என்று சொல்கின்ற போதே தமிழ் நிலத்தில் உள்ள ஐந்து தினைகளை குறிப்பதை நாம் நினைவு கூரலாம். பல்லாயிரம் ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் தினை ஒரு அருமையான உணவு பொருளாக இருந்து வருகிறது.

அரிசி,கோதுமை ஆகியவற்றை விட அதிகமான சத்துகளை உள்ளடக்கிய

அருமையான தானியமாக தினை விளங்குகிறது. தினையை ஆயிரம் மைல்கள் தூரம் சோர்வின்றி பறக்கும் பறவைகள் விரும்பி சாப்பிடுகின்றன. எனவே தினையை நாம் உணவாக எடுத்துக் கொள்ளும் போது உள் உறுப்புகள் பலம் பெறுகின்றன. நோயில்லாத வாழ்க்கைக்கு தினை மிகவும் உதவுகிறது. தினையை மேல் பூச்சு மருந்தாகவும், உள்பூச்சு மருந்தாகவும் பயன்படுத்தலாம். பல்வேறு நோய்களை போக்கக் கூடியதாக இந்த தினை விளங்குகிறது.

இந்த தினையை பயன்படுத்தி நமது உடலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் சில எளிய வகை உணவு பொருட்களை எவ்வாறு தயாரிக்கலாம் என்பதை இப்போது பார்க்கலாம். தினையை பயன்படுத்தி பாயாசம் ஒன்றை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் தினை, ஏலக்காய் பொடி, சர்க்கரை அல்லது வெல்லம், பால், நெய், முந்திரி பருப்பு. தினையை சமைப்பதற்கு முன்பாக சுமார் ஒரு மணி நேரம் ஊற வைத்து பின்னர் அதை வேக வைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின்னர் தேவையான அளவு வெல்லத்துடன் நீரை சேர்த்து பாகாக தயார் செய்து கொள்ள வேண்டும். வெல்லத்துடன் சில நேரம் மண் இருப்பது போன்று தெரிந்தால், தண்ணீரில் நன்றாக கரைத்து பின்னர் அதை வடி கட்டி எடுத்து பாகாக தயார் செய்து கொள்ள வேண்டும். பின்னர் இதனுடன் ஏலக்காய் பொடி, தினை ஆகியவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். வெந்த தினை என்பதால் ஒரு கொதிக்கு பிறகு, இதனுடன் காய்ச்சிய பாலை சேர்த்து ஒரு கொதி வந்தவுடன் நிறுத்திக் கொள்ளலாம்.

பின்னர் முந்திரி பருப்பை நெய்யில் வறுத்து இதனுடன் சேர்க்க மணமிகுந்த தினை பாயாசம் ரெடியாகி விடும். இது குழந்தைகள் முதல் அனைவரும் விரும்பி சாப்பிடும் உணவாகவும், அதே நேரம் உடலுக்கு ஊட்டம் தருவதாகவும் அமைகிறது. இலக்கியங்களிலே வேட்டுவர்கள் தேனையும் தினை மாவையும் கலந்து சாப்பிட்டு விட்டு காடு மேடுகளில் நாள் முழுவதும் வேட்டையாடி திரிந்ததாக கூறப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு தினை மிகுந்த பலத்தை கொடுப்பதாக அமைகிறது. உடலுக்கு குளிர்ச்சி தரக் கூடியதாக

தினை விளங்குகிறது. சிறுநீரை வெளித்தள்ளக் கூடியதாக, பசியை தூண்டக் கூடியதாக, வயிற்று கோளாறுகளை சரி செய்யக் கூடியதாக அமைகிறது.

அதே போல் தினையை பயன்படுத்தி குழந்தைகள் விரும்பி சாப்பிடக் கூடிய லட்டு எப்படி தயாரிக்கலாம் என்பதை பார்க்கலாம். இதற்கு தேவையான பொருட்கள் தினை மாவு, ஏலக்காய் பொடி, சர்க்கரை, வறுத்து அரைத்து எடுத்து வைத்துள்ள தினை மாவுடன் தேவையான அளவு சர்க்கரையை சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். பின்னர் இதனுடன் சிறிது ஏலக்காய் பொடியை சேர்க்க வேண்டும்.

பின்னர் நெய்யை சூடாக உருக்கி தேவையான பதத்தில் இந்த கலவையுடன் சேர்த்து சிறு சிறு உருண்டைகளாக லட்டாக பிடித்துக் கொள்ளலாம். உருகிய நெய்யின் சூட்டிலேயே சர்க்கரை கரைந்து மாவுடன் இணைந்து விடும்.சூடு இருக்கும்போதே லட்டாக பிடித்தால் நன்றாக உருண்டையாக வரும். தேவைப்பட்டால் பாதாம் பருப்பு, முந்திரி பருப்பு ஆகியவற்றை மிக்சியில் அரைத்து இதனுடன் சேர்ப்பதால் சுவையும், உடலுக்கு ஊட்டமும் கிடைக்கக் கூடிய பண்டமாக இருக்கும். இது குழந்தைகள் விரும்பி உண்ணும் பொருளாக இருக்கும்.